இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 350 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 14 – செவ்வாய்க்கிழமை 30 ஜூலை 2024 – வெளியீர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 350 : Thiruvalluvar Year - 2055 - Aadi 14 - Tuesday 30 July 2024 - Dak 8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட

# ரூ.71.94 கோடியில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 30 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் சிவகங்கை, தேனி, திருவாரூர், கள்ளக்குறிச்சி, மதுரை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 71 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.07.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் சிவகங்கை, தேனி, திருவாரூர், கள்ளக்குறிச்சி, மதுரை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 71 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**புதிதாக கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

தங்களது ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு விண்ணப்பிக்க வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, தற்போது வரை 290 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 244 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியின் திட்டக்கூறு மூலம் சிவகங்கை மாவட்டம் – கண்ணன்குடி, மானாமதுரை, சிங்கம்புணரி, திருப்புவனம் மற்றும் திருப்பத்தூர், தேனி மாவட்டம் – தேனி மற்றும் கம்பம், திருவாரூர் மாவட்டம் – கொரடாச்சேரி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – தியாகதுருகம் மற்றும் ரிஷிவந்தியம், மதுரை மாவட்டம் – மேலூர், இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம், திருவண்ணாமலை மாவட்டம் – துரிஞ்சாபுரம், திருவண்ணாமலை, பெரணமல்லூர், போளூர், கன்னியாகுமரி மாவட்டம் – தக்கலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – வையம்பட்டி, வேலூர் மாவட்டம் – காட்பாடி ஆகிய இடங்களில் 71 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 19 ஊராட்சி

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## சட்டம் ஒழுங்கை பேணிக்காப்பதில்

# இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது தமிழ்நாடு!

## எடப்பாடி பழனிச்சாமியின் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்து அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை, ஜூலை 30-**

**சட்டம் ஒழுங்கை பேணிக்காப்பதில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது தமிழ்நாடு என்று எடப்பாடி பழனிச்சாமியின் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்து பேட்டியளிக்கையில் அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.**

தலைமைச் செயலகத்தில் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தொடர் தோல்வியின் விரக்தியினால், இன்றைக்கு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிச்சாமி தமிழ்நாடு கொலை மாநிலமாக மாறிவிட்டது என்கின்ற ஒரு புதிய குற்றச்சாட்டை வைத்திருக்கின்றார். தமிழ்நாடு கொலை மாநிலம் அல்ல, கலை மற்றும் அறிவுசார் மாநிலம்தான். இன்னும் சொல்லவேண்டும் என்றால், சமூக விரோதிகளை களையெடுக்கின்ற மாநிலம் தமிழ்நாடு. இதை அவர் உணர்ந்து கொண்டாக வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் கூட எனக்கு தெரியாது; நான் டி.வி.யில் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என்று 13 உயிர்கள் பலியான சம்பவம் கூட முதலமைச்சராக இருந்து தனக்கு தெரியாது என்று தான் சொல்லியிருக்கிறாரே தவிர ஒப்புக்கொள்ளவில்லை. அப்போதுதான் தெரியும் என்று சொன்னார்.



ஆனால் எங்களுடைய முதலமைச்சர் எதையும் தைரியமாக சொல்லக்கூடியவர்; ஏற்றுக் கொள்ளக் கூடியவர். தமிழ்நாட்டில் 26, 27, 28ஆம் தேதிகளில் அவர் 5 சம்பவங்களை சொல்லுகிறார். அதில் ஒன்று புதுச்சேரியில் நடந்தது. அதையும் நம்முடைய தமிழ்நாட்டு கணக்கிற்கு எடப்பாடி பழனிச்சாமி கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அது புதுச்சேரியில் நடந்தது. மீதமுள்ள 4 சம்பவங்களுக்கும் வன்முறை சம்பவங்கள் என்று எடுத்துக்கொண்டால், அதில் எதுவுமே அரசாங்கத்திற்கு தொடர்புடையவை அல்ல. எல்லாமே சொந்த காரணங்களுக்காக அல்லது அவர்களுக்குள்ளே இருக்கக்கூடிய முன் விரோதத்தின் அடிப்படையில், பகைமை அடிப்படையில் இந்த சம்பவங்கள் நடந்து இருக்கின்றனவே தவிர, இதில் எதுவுமே இன்றைக்கு சட்டம் ஒழுங்கு சீர் கெடுக்கும் அளவுக்கு எந்த சம்பவங்களும் கிடையாது.

ஆனால் அதே நேரத்தில் யார் யாருக்கு முன் விரோதம் இருக்கின்றது என்றெல்லாம் இப்போது கண்டு பிடித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ரவுடிகளிடத்தில், எந்தெந்த ரவுடிப் பட்டியல் இருக்கிறதோ, அந்தப் பட்டியலை கையில் எடுத்துக்கொண்டு

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## தமிழ்நாட்டில்

# 8 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, ஜூலை 30 -*

*தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, நெல்லை, குமரியில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளது. 7 முதல் 11 செ.மீ. வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதால் இன்று 8 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் கேரளா, கர்நாடகாவில் மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.*

*சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 - 37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.*

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:**

*தமிழக கடலோரப்பகுதிகளில் 02.08.2024ந் தேதி வரை மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மீனவர்கள் இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.*